(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, சயினாபுரம் ஊராட்சி, புதுக்கண்டிகை கிராமத்திற்கு ரூபாய் 2 இலட்சம் மதிப்பில் புதிய சத்துணவுக்கூடம் கட்ட மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மூன்று மாதத்திற்குள் கட்டி முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த புதுக்கண்டிகை கிராமத்திற்கு உடனடியாக சத்துணவுக்கூடம் அமைப்பதற்கு உத்தரவு பிறப்பித்தார். 100 நாட்களில் நூறாண்டு சாதனைகளைப் புரிந்தவரும், கேட்காமலேயே கொடுக்கும் "அட்சய பாத்திரமாக" விளங்கிவரும், தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தக் கிராமத்து மக்களின் சார்பாக என்னுடைய கோடானுகோடி நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

ஜவுளி சந்தை

***1366—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், தெக்கலூர் ஊராட்சியில் ஜவுளி சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், தெக்கலூர் ஊராட்சியில் தனியே ஒரு ஜவுளி சந்தை அமைக்க அப்பகுதி தொழில் முனைவோர்கள் எவரேனும் முன்வருவார்களாயின், அரசின் உதவியுடன் இப்பகுதியில் ஜவுளி சந்தை அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இரண்டு முறை பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, அவினாசி தொகுதி வாக்காளர் பெருமக்களின் நல்ல உள்ளங்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்ட சட்டமன்றத் தொகுதியில் உள்ள தெக்கலூர் ஊராட்சியில் விசைத்தறிகள் அதிகமாக உள்ளன. தெக்கலூரில் ஜவுளி சந்தை அமைப்பதற்குப் போதுமான இடம் உள்ளது. மேலும் மக்களின் பயன்பாட்டுக்கு வசதியாக அந்த இடத்தில் ஜவுளி சந்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்தபோது, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பகுதியிலே நான்கு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றில் மூன்று திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இன்னொரு திட்டம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், கடந்த ஐந்தாண்டுக் காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல், திருப்பூர், செங்கம்பள்ளியிலே இருக்கின்ற திட்டம், பிப்ரவரி 2012

2011 ஆகஸ்ட் 25]

இல் தொடங்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின்படி, அங்கே விசைத்தறி கிளஸ்டர் குழுமங்கள் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி விசைத்தறி மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவினாசி தொகுதி* Industrially backward *பகுதி என்று அறிவிக்கப்பட்டு, தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கக்கூடிய பகுதி. தெக்கலூரில் விசைத்தறிகளும், பஞ்சாலைகளும் நிரம்பி இருக்கக்கூடிய பகுதியில் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் உடனடியாக அந்த ஜவுளி சந்தையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அவினாசி சட்டமன்ற உறுப்பினருக்கு அளித்த பதில்தான். விசைத்தறி குழுமங்கள் அமைப்பதற்கு ஆய்வுகள் செய்து, தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்து, அந்தத் தொகுதியை வளமைமிக்க தொகுதியாக மாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், ஆண்டிப்பட்டியில்* Hi-tech Park *என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். விழாவும் நடத்தப்பட்டது. வங்கியில் அரசு சார்பாகப் பணமும் போடப்பட்டது. அந்தத் திட்டம் தொடங்கிய சில நாட்களில் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால், அதைக் கிடப்பிலே போட்டு, ஐந்தாண்டுக் காலம் அந்தத் திட்டம் என்ன ஆனது என்றே தெரியவில்லை. கடந்த வாரம் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஆண்டிப்பட்டிக்கு வந்து அந்தப் பகுதியைப் பார்த்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்த* Hi-tech park *நிறைவுபெற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்பெறக்கூடிய திட்டம் என்பதை எடுத்துச்சொல்லி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்கி 4¼ கோடி ரூபாய் அரசு மானியமாக இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தார்கள். அந்தப் பணம் இன்றையதினம் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியிலே வைப்பு நிதியிலே 5½ கோடி ரூபாயாக வட்டியுடன் சேர்ந்து உயர்ந்துள்ளது. நானும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கடந்த வாரம் அந்த வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவை ஆய்வு செய்தோம். அங்கே பணிகள் வேகமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன. பிப்ரவரி, 2012-லே தேனி-வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா*

2011 ஆகஸ்ட் 25]

செயல்படும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகளை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம். அதை இனிமேலாவது தினந்தோறும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மத்தியிலே ஊழலுக்கு எதிரான ஒரு வலுவான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அன்னா ஹசாரே தொடர்ந்து காலவரையற்ற உண்ணாவிரதத்தில் இருந்துகொண்டிருக்கிறார். அதனுடைய ஒரு பகுதியாக தமிழகத்தில், சென்னை நகரில் சட்டமன்றம் நடைபெறுகிற நேரத்தில் 9-வது நாளாக ஊழலுக்கு எதிரானவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அரசு சார்பிலே யாரும் சந்தித்தார்களா? அதைப் பற்றி ஏதாவது அறிக்கை இந்த நேரத்திலே அளித்தால் சரியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து என்னிடத்திலே எந்த அறிவிப்பும் கொடுக்காமல் இப்படி எழுந்து பேசினால், அது எந்தவிதத்திலே சரி என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர், நாளை ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும். இது இல்லை. இதுகுறித்து என் அறையில் வந்து பேசுங்கள்.*